TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8033609

1. District : மாவட்டம் நாமக்கல் | PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு | Year: ஆண்டு 2018 | FIR No.: மு.த.அ. எண் 1 | Date: நாள் 18/01/2018

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் — Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் ① 08/01/18 சுமார் 17.30 மணி
   Date to : நாள் வரை ② 08/01/18 சுமார் 12.30 மணி
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17/01/2018 — Time : நேரம் 16.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL-I — Time : நேரம் 16.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 40 கி.மீ. வடமேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் —
   (b) Address : முகவரி வட்டார வளர்ச்சி அலுவலகம், வெண்ணந்தூர் ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K.சுந்தரம்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கருப்பண்ண கவுண்டர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 30
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் பணித்தள பொறுப்பாளர்
   (g) Address : முகவரி கட்டப்பம்பட்டி, தொட்டவலசு (PO), இராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி. P.தெய்வானை, வட்டார வளர்ச்சி அலுவலர், வெண்ணந்தூர் ஒன்றியம். நாமக்கல் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   முன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18.1.18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு 18.1.18

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 18/01/2018 at 0900Hrs.

Name: பெயர் ..............................
Rank: நிலை ..................... No. எண் .........

HC 367

GCP-240-34(Type 2) 90,000 Cps 21 3 16 (HCL-12)p.2

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/AC/2018 ஊழல் தடுப்பு சட்டம்-1988 பிரிவு 7-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...

17.01.2018-ந்தேதி புதன்கிழமை மாலை 16.00 மணிக்கு நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் தாலுக்கா, குட்டலாடம்பட்டியை சேர்ந்த கருப்பண்ணகவுண்டர் மகள் K.சந்தோசம் என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி, காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களிடம் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட ஒரு புகார் மனுவை சமர்ப்பித்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு :

அனுப்புதல்:-

K.சந்தோசம்
D/o கருப்பண்ணகவுண்டர்
குட்டலாடம்பட்டி
தொட்டிவலசு (Po)
இராசிபுரம் (தாலுக்கா)
நாமக்கல் (மாவட்டம்)

பெறுதல்

காவல் துணைக் கண்காணிப்பாளர்
லஞ்ச ஒழிப்புதுறை
நாமக்கல்.

அய்யா:-

நான் என் அம்மா சின்னபொன்னுவுடன் குட்டலாடம்பட்டியில் உள்ள எனது அம்மா வீட்டில் வசித்து வருகிறேன். எனக்கு திருமணமாகி பின் எனது கணவரிடமிருந்து விவாகரத்து பெற்று விட்டதால் என் அம்மாவுடனே இருக்கிறேன். நான் வெண்ணந்தூர் யூனியனில் எங்க பஞ்சாயத்துக்கு 100 நாள் வேலை திட்டத்திற்கு பணித்தளப்பொறுப்பாளராக இருந்து வருகிறேன். நாங்க இப்ப குடியிருக்கும் வீடு ஓட்டுவீடாகும். அது மிகவும் பழமையானது. மழை பெய்தால் வீட்டிற்குள் தண்ணீர்

நுழைந்து விடுகிறது அதனால் எனது அம்மா பெயரில் தமிழக அரசின் பசுமை வீடு திட்டத்தின் கீழ் ஒரு வீடு ஒதுக்கீடு செய்து தருமாறு கோரி கடந்த 5 மாதங்களுக்கு முன் வெண்ணந்தூர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு விண்ணப்பித்திருந்தேன். அதன்பேரில் பேரில் அதிகாரிகள் நேரில் வந்து எங்க வீட்டை பார்வையிட்டு விசாரித்துவிட்டு சென்றார்கள். பசுமை வீடு திட்டத்தின் கீழ் வீடு பெறுவதற்காக எனது அம்மா சார்பாக நான்தான் வெண்ணந்தூர் BDO ஆபீஸிற்கு சென்று கவனித்து வருகிறேன். நான் கடந்த 03.01.2018-ந் தேதி பணித்தளப்பொருப்பாளர்களுக்கு வெண்ணந்தூர் BDO ஆபீஸில் meeting நடந்தது. அந்த meeting முடிந்து அன்று மாலை 5.30 மணி சுமாருக்கு நான் BDO திருமதி.தெய்வாணை அவர்களை சந்தித்து எனது அம்மா பெயரில் வீடு ஒதுக்கீடு சம்பந்தமாக கேட்டேன். அப்போது என்ன உனக்கு 2 இலட்ச ரூபாய்க்கு வீடு கிடைக்குதுன்னா சும்மாவா. நீ இங்கதான் வேலை செய்ய, உனக்கு தெரியாதா என்னை வந்து பாக்கனும்னு. உனக்கு வீடு கிடைக்கனும்னா எனக்கு தனியா ரூ.15,000/- கொடுக்கனும் என்று சொல்லிவிட்டு போய் பணத்தை ரெடி பண்ணிட்டு வான்னு சொல்லி அனுப்பீட்டாங்க. பின் கடந்த 08.01.2018-ந்தேதி பகல் சுமார் 12.30 மணிக்கு பணித்தள பொறுப்பாளர் அலுவல் சம்பந்தமாக வெண்ணந்தூர் BDO ஆபீஸ் சென்றுவிட்டு அப்படியே BDO திருமதி.தெய்வாணை அவர்களை நேரில் சந்தித்து எனது அம்மாவிற்கு வீடு ஒதுக்கீடு சம்பந்தமா மறுபடியும் கேட்டேன். அப்போது அவர் எங்க பணம் கொண்டு வரலையா, ரூ.15,000/- தனியாக எனக்கு கொடுத்தால்தான் work order-ல் கையெழுத்து போடுவேன் என்று கூறினார். நான் அதற்கு என் அம்மாவிற்கு வயதாகிவிட்டது பார்த்து செய்யுங்க என்று கேட்டதற்கு எனக்குகூடதான் வயதான அம்மா இருக்கிறாங்க அதெற்கெல்லாம் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார். நான் பில் வந்தவுடன் அதிலிருந்து கொடுக்கிறேன் இப்ப கையெழுத்து போட்டுகொடுங்கன்னு சொன்னேன். நீ ரூ.15,000/- கொடுத்தா கையெழுத்து போடுறேன், இல்லைன்னா வீடு வேறு யாருக்காவது allot பண்ணிக் கொடுத்திடுவேன் என்று கூறிவிட்டார். எனக்கு BDO திருமதி.தெய்வாணை அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்து எனது அம்மா பெயருக்கு Green House-

க்கான work order பெற விருப்பம் இல்லாததால் நாமக்கல் லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் கொடுக்க முடிவு செய்தேன். நான் பணித்தளப்பொறுப்பாளராக இருப்பதால் நான் லீவு சொல்லிவிட்டு வரமுடியாத காரணத்தால் இன்று லீவு சொல்லிவிட்டு வந்து புகார் கொடுக்கிறேன். நான் ரூ.15,000/-த்துடன் வெண்ணந்தூர் BDO திருமதி.தெய்வாணை அவர்களை நேரில் சந்திக்க உள்ளேன். எனவே எனது அம்மா பெயரில் வீடு வழங்க என்னிடம் லஞ்சமாக ரூ.15000/- பணம் கேட்ட வெண்ணந்தூர் BDO திருமதி.தெய்வாணை அவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு உண்மையுள்ள (ஒப்பம்)K.சந்தோசம் 17.1.18.

மேற்கண்ட புகார் மனுவை பெற்று, புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் செய்யப்பட்டுள்ளதா என்றும், குற்ற அலுவலர் கையூட்டு கேட்பதை உறுதி செய்யும் பொருட்டும் ஒரு முன்விசாரணைக்கு உத்திரவிடக்கோரி, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்திற்கு, மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக எண்.PE.14/2018/RDP/NK, நாள்.17.01.2018-ல் கண்ட உத்திரவுபடி, 17.01.2018-ந் தேதி பிற்பகல் 16.45 மணிக்கு குற்ற அலுவலர் திருமதி.தெய்வாணை, BDO வெண்ணந்தூர் மீது ஒரு முன்விசாரணை பதிவு செய்யப்பட்டது. அந்த முன்விசாரணையில், திருமதி.சந்தோசம் அவர்களின் தாயார் திருமதி சின்னபொன்னுவின் பெயரில் தமிழக அரசின் பசுமை வீடு திட்டத்தின் கீழ் வீடு ஒதுக்கீடு செய்து உத்திரவு பிறப்பிக்க குற்ற அலுவலர் திருமதி.தெய்வாணை, BDO வெண்ணந்தூர் அவர்கள் புகார்தாரர் திருமதி.K.சந்தோசத்திடம் தனக்கு தனியாக ரூ.15,000/- கொடுத்தால்தான் திருமதி.சந்தோசம் அவர்களின் தாயார் திருமதி. சின்னபொன்னுவின் பெயரில் தமிழக அரசின் பசுமை வீடு திட்டத்தின் கீழ் வீடு ஒதுக்கீடு செய்து உத்திரவு பிறப்பிக்க கையெழுத்திடுவேன் என்று கூறியது உறுதி செய்யப்பட்டது.

ஆகவே, எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதாக முன்விசாரணையில் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 18.01.2018-ந்தேதி காலை 08.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.1/AC/2018 ஊழல் தடுப்பு சட்டம்-1988 பிரிவு 7 -ன்படி எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் நாமக்கல் மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

18.1.18

(GV.கிருஷ்ணா ராஜன்)
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.